# வக்பு வாரியத்தில் இளநிலை உதவியாளர் பணி நவ.13-ல் ஆன்லைன் தேர்வு

**திருச்சி**

தமிழ்நாடு வக்பு வாரியத்தில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு நவ.13-ம் தேதி ஆன்லைன் மூலமாக தேர்வு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக வக்பு வாரிய முதன்மைச் செயல் அலுவலர் பரிதா பானு வெளியிட்ட அறிக்கை: தமிழ்நாடு வக்பு வாரியத்தில் காலியாக உள்ள 27 இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கான தேர்வு நவ. 13-ம் தேதி சென்னை, கோவை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உள்ள தேர்வு மையங்களில் ஆன்லைன் மூலமாக நடைபெறும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட நபர்களுக்கு தேர்வுகூட நுழைவுச்சீட்டு, விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இ-மெயில் முகவரிக்கும், இது குறித்த தகவல் விண்ணப்பதாரரின் செல்போன் எண்ணுக்கும் அனுப்பப்படும்.

மேலும், விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட விவரமும் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு குறுந்தகவலாக அனுப்பி வைக்கப்படும் என்று தமிழ்நாடு வக்பு வாரியத் தலைவர் எம்.அப்துல் ரகுமான் தெரிவித்துள்ளார் என அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.